05.11.2019. C.C.No. 27/2003

அ.சா.2 திரு.வசந்த சேகரன், த/பெ.வெங்கடாசலம்

1,4,6,7 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

நான் எந்த காலகட்டத்திலான இருப்புக் குறைவை நியாய விலைக்கடைகளில் தணிக்கை செய்தேன் என்றால் 1993-1994 வருடத்தைய கணக்கை தணிக்கை செய்தேன். தணிக்கையாளரை பொறுத்து வருடத்திற்கு ஒருமுறை தணிக்கை செய்வோம். தணிக்கையாளர் இருப்பு குறைவு மட்டும் தணிக்கை செய்வோம் என்றால் சரியல்ல. இருப்பு குறைவையும் சேர்த்து சங்கத்தின் மற்ற தணிக்கைகளையும் செய்வோம். ஒவ்வொரு நியாயவிலைக்கடைகளிலும் இருப்புக் குறைவு மட்டும் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய தணிக்கை அறிக்கையில் ஒவ்வொரு நியாயவிலைக்கடைகளிலும் எந்தெந்த ஆவணத்தை பார்வையிட்டு அறிக்கை செய்தேன் என்றால் சங்கத்தின் பொறுப்பு பதிவேடை பார்த்து தணிக்கை செய்தேன். மேற்படி பொறுப்பு பதிவேடில் எந்தெந்த பொருட்கள் எந்தெந்த இடத்தில் இருந்து நியாயவிலைக்கடைகளுக்கு வரப்பெற்றது என்பது குறித்த விபரங்கள் இருக்காது என்றால் சரியல்ல. பொறுப்பு பதிவேடு என்பது விற்பனையாளரின் பொறுப்புகள் அடங்கியது என்றால் சரிதான். எந்தெந்த பொருட்களில் என்ன என்ன குறைபாடுகள் என்று நான் எனது தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. இயற்கை சூழ்நிலை காரணமாகவும், வேறு காரணங்களாலும் இருப்புகள் குறைய வாய்ப்புண்டு என்றால் சரிதான். நான் முறையாக தணிக்கை கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நியாயவிலைக்கடைகளில் சிற்றெழுத்தர் என்ற பொறுப்பில் ஒருவர் உண்டு என்றால் சரியல்ல. பதிவேடுகளில் இருப்பு குறைவு எழுத்துப் பிழையினாலும் ஏற்படும் என்றால் சரிதான். அதனை சரிசெய்ய தான் தணிக்கை மேற்கொண்டேன். என்னுடைய தணிக்கை அறிக்கை முழுமையானது என்றால் சரியல்ல. மேல் அதிகாரியின் உத்தரவின் பேரில் நான் பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3, 5, 8 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

1,4, 6, 7 வது எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -

இல்லை.

மறுவிசாரணை -

இல்லை.